தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

நான்காம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

மே, சூன் - **2017**

**A051** மொழிவரலாறு - 1

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. உருபொலியன் என்றால் என்ன ?
2. முன்னிலை பன்மை வினைமுற்றில் புதிதாக வந்து பயிலும் இரட்டைப் பன்மை விகுதி யாது?
3. மராட்டியக் காலத்தமிழை அறிய உதவும் இலக்கியமல்லாத பிற ஆதாரங்கள் யாவை?
4. தமிழில் புதிய உரைநடை எக்காலத்தில் தோன்றியது?
5. தமிழ் எழுத்துக்கள் எத்தனை என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது?
6. வாணாள், வாணர் இச்சொற்களைப் பிரித்து எழுதுக.
7. இடப்பொருள் வேற்றுமையின் சொல்லுருபுகள் யாவை?
8. சங்க இலக்கியத்தில் காணப்படும் வட சொற்கள் ஐந்தினை குறிப்பிடுக.
9. உடம்படு மெய் என்றால் என்ன?
10. லகர மெய் சங்கம் மருவிய காலத்தில் மொழிமுதலாக வந்த சொல்லாக ஒன்றினைக் குறிப்பிடுக.
11. தற்பவம், தற்சமம் ஆகிய வடமொழி ஆக்கக் கூறுகளுக்குச் சான்று தருக.
12. தமிழ்மொழி எந்த எழுத்து முறையில் எழுதப் பெறுகிறது?
13. வட திராவிட மொழிகள் யாவை?
14. சங்க காலத்தில் புதிதாக வழங்கிய முன்னிலை பன்மை இடப் பெயர் யாது?
15. நந்தா விளக்கு, நிலைதாக்கி இச்சொற்களில் உள்ள மாற்றொலிகளைப் புலப்படுத்துக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. **(5x3=15)**

1. கிளை மொழி வகைகளைக் குறிப்பிடுக.
2. மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபுகளையும் பொருள்களையும் எழுதுக.
3. இலக்கணக் கூறுகளில் ஏற்பட்ட மாற்றங்களைப் பட்டியலிடுக.
4. தொல்காப்பியர் குறிப்பிடும் வரி வடிவம் குறித்து எழுதுக.
5. உடல் மொழி என்பது யாது?
6. உருபனியல் வினைச் சொல்லில் தன்மை வினைமுற்று பற்றி எழுதுக.
7. பல்லவர்காலத் தமிழை வெளிப்படுத்தும் வைணவ இலக்கியங்கள் யாவை?
8. உயர்வு ஒருமைப் பெயர்கள் பற்றி எழுதுக.

பிரிவு - 3

மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. **(3x15=45)**

1. (அ) தொல்காப்பியர் கால உருபனியல் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழிவரலாறு நோக்கில் தமிழ் வரி வடிவ வளர்ச்சி குறித்து விவரிக்க.

2. (அ) தமிழ் மொழி அமைப்பு குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாயக்கர் காலத் தமிழ் குறித்து விவரிக்க.

3. (அ) பல்லவர் காலத் தமிழில் எழுத்தியல் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சங்க காலத் தமிழ் குறித்து விவரிக்க.

***